**தென்பகுதி நெடுஞ்சாலை முதலீட்டு நிகழ்ச்சி செயற்திட்டம் - 2014**

---

தென்பகுதி நெடுஞ்சாலை முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 1995 நவம்பர் 09 ஆந் திகதிய 8271- எஸ்ஆர்ஐ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 25.2 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய பல்கலைக்கழகக்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள், அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தென்பகுதி நெடுஞ்சாலையின் தொழில்நுட்ப, வர்த்தக நிதி பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு நோக்கம் என்பன உள்ளடங்கலான சாத்தியவள கற்கை மற்றும் ஆரம்ப வடிவமைப்பு தயாரிப்பதற்குரிய நெடுஞ்சாலை அபிவிருத்திக்கான மற்றும் செயற்படுத்தலுக்கான நிறுவனரீதியான மற்றும் கொள்கை கட்டமைப்புக்களை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட ரூபா 130 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1 மில்லியன் ஆகும். செயற்திட்ட உடன்படிக்கை ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவி மாதிரி வேலையின் கீழ் 1995 நவம்பர் 09 இல் கைசாத்திடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 பெப்ரவரியில் தொடங்கியிருந்ததுடன் 2014 யூன் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும்இ செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4. கணக்காய்வாரின் பொறுப்பு**

---

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும்,

செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

அலுவலக கட்டிடம் வாடகைக்கமர்த்தலில் செய்யப்பட்ட ரூபா 320,000 தொகையான மீளளிக்க வேண்டிய வைப்புக்கள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையின் படி நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் 2014 ஆம் ஆண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் 2014 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 1.0 | 130 | 85 | 0.13 | 16.45 | 0.13 | 16.45 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 20 | - | 16.72 | - | 20.12 |
| ஆர்டிஏ கடன் | - | - | - | - | 3.00 | - | 3.00 |
| | 1.0 | 130 | 105 | 0.13 | 36.17 | 0.13 | 39.57 |

## 3.2 பௌதீக செயலாற்றல்

03 கூறுகளின் ஊடாக செயற்திட்டத்தின் வெளியீடு அடைய வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் ரூபா 130 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.00 மில்லியன் ஒதுக்கீடுகள் அதன் மீது மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், அத்தகைய ஒதுக்கீடுகள் ஒவ்வொரு கூற்றிற்காகவும் பிரிக்கப்பட்டிருக்காததுடன் அதன்படி விரிவான நிதிசார் திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றத்தில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் முதலாவது கூறின் கீழ் நெடுஞ்சாலை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நோக்கங்கள் மீதான நிறுவனரீதியான வலுப்படுத்தல் மற்றும் கொள்கை மாதிரி வேலை என்பனவற்றிற்காக செயல் நடவடிக்கை திட்டம் தயாரிப்பதற்கு செயற்திட்டத்தால் நிபுணர்களின் சேவைகள் பெறப்பட்டிருந்தது. செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு 2013 நவம்பரில் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அத்தகைய சிபார்சுகளை அமுலாக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மீது தகவல்கள் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செற்திட்டத்தின் இரண்டாவது கூறின் கீழ் இலங்கையினுடைய வீதித் துறைக்காக முறையான நிர்மாண தொழில்நுட்பங்கள் தயாரிக்கப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டு வீடுகள் அல்லது வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் வழங்கப்பட வேண்டும். நிர்மாண தொழில்நுட்பங்கள் மீதான அறிக்கை 2013 நவம்பரில் தயரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதுடன் வீதிகளிற்கான புதிய நிர்மாண

தொழில்நுட்பங்களிற்காக அபிவிருத்தி செய்யப்பட்ட பொறிமுறை மீது தகவல்கள் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) தென்பகுதி நெடுஞ்சாலை விரிவாக்கலிற்காக சாத்திய வளக் கற்கைகள் மற்றும் ஆரம்ப வடிவமைப்புகள் தயாரிப்பதற்காக தொழில்நுட்ப ஆதரவு வழங்குவதற்கும் செயற்திட்டத்தின் மூன்றாவது கூறின் கீழ் அமுலாக்கல் தயார்ப்படுத்தலை முன்னேற்றுவதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், இருக்கின்ற நெடுஞ்சாலை வலையமைப்புடன் கொழும்பு நகரத்தை தொடர்புபடுத்துவதற்கு தென்பகுதி நெடுஞ்சாலையின் விரிவாக்கலிக் பிரேரிக்கப்பட்ட வழிகளின் சாத்தியவளக் கற்கை மற்றும் ஆரம்ப பொறியியல் வேலைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.